**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், வேலூர் பிரிவு**

அனுப்புநர்
திருமதி நோயலின் ஜான்,
மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்,
முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்
கருணாநிதி மாவட்ட விளையாட்டு
அரங்கம், காட்பாடி, வேலூர்–632 014.
அலைபேசி எண். 7401703483

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர் அவர்கள்,
மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்,
சத்துவாச்சாரி, வேலூர் மாவட்டம்–632 009

ந.க.எண்.192/2022, நாள் 07.02.2023

ஐயா,

பொருள் : தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2022–23 (Tamil Nadu Chief Minister's Trophy Games 2022-23) பள்ளி மாணவ, மாணவியர்கள் பிரிவினருக்கான மாவட்ட அளவிலான போட்டிகள் பிப்ரவரி மாதத்தில் நடைபெறவுள்ளதனை அனைத்துப் பள்ளிகளுக்கும் தகவலளித்து பெருமளவில் பங்கு பெறச் செய்தல் – ஒத்துழைப்பு கோருதல் – தொடர்பாக.

===

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி விளையாட்டுப் போட்டிகளுக்கான முக்கியத்துவம் மற்றும் அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், அனைத்துப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான பிரிவுகளில் மாணவ, மாணவியர்கள் இருபாலரும் பங்கேற்கும் வகையில், 2022–23ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் இணைப்பில் கண்டுள்ள பட்டியலின்படி அட்டவணையிடப்பட்டுள்ளது, ஏற்கனவே தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணையதளம் (**www.sdat.tn.gov.in**) வாயிலாக பதிவு செய்த விளையாட்டு வீரர்கள் மட்டும் தான் இதில் பங்கேற்க முடியும். **நேரிடையாக போட்டிகளில் பங்கேற்க இயலாது**. அனைத்துப் போட்டிகளும் காலை 8.00 மணி முதல் துவங்கும்.

ஆகவே இத்தகவலை அனைத்து வகைப் பள்ளிகளுக்கும் தங்கள் இணையதளம் மூலம் தெரிவித்து மாணவ, மாணவியர்கள் பெருமளவில் பங்குபெறச் செய்யுமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

போட்டிகள் நடைபெறும் இடம், தேதி மற்றும் நேரம் குறித்த விவரங்கள் குறுஞ்செய்தி மூலம் தாங்கள் பதிவு செய்த அலைபேசி எண்ணிற்கு அனுப்பப்படும்.

தங்கள் உண்மையுள்ள,

இணைப்பு : அட்டவணை

மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்
நலன் அலுவலர், வேலூர்,

நகல் பணிவு : மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், வேலூர் மாவட்டம்.

## போட்டி அட்டவணை

| வ. எண். | விளையாட்டுகள் நடைபெறும் இடம் | பள்ளி மாணவ/ மாணவியர்கள் (12 முதல் 19 வயது வரை) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | சிலம்பம் (ஆண்கள்/ பெண்கள்) மாவட்ட விளையாட்டு அரங்கம், காட்பாடி | 09.02.2023 முதல் 11.02.2023 வரை |
| 2, | மேசைப்பந்து (பெண்கள்)அப்துல் கலாம் மேசைப்பந்து அகாடமி, 54, பலராமன் தெரு, சின்ன அல்லாபுரம், வேலூர். | 13.02.2023 |
| | மேசைப்பந்து(ஆண்கள்) அப்துல்கலாம் மேசைப் பந்து அகாடமி, 54, பலராமன் தெரு, சின்ன அல்லாபுரம், வேலூர். | 14.02.2023 |
| 3. | கிரிக்கெட் (ஆண்கள்) தந்தை பெரியார் பாலிடெக்னிக், வேலூர். | 15.02.2023 மற்றும் 16.02.2023 |
| | கிரிக்கெட் (பெண்கள்) தந்தை பெரியார் பாலிடெக்னிக், வேலூர். | 17.02.2023 |
| 4. | தடகளம் (பெண்கள்), மாவட்ட விளையாட்டு அரங்கம், காட்பாடி | 21.02.2023 |
| 5. | தடகளம் (ஆண்கள்), மாவட்ட விளையாட்டு அரங்கம், காட்பாடி | 22.02.2022 |
| 6. | கால்பந்து (ஆண்கள்), மாவட்ட விளையாட்டு அரங்கம், காட்பாடி | 23.02.2023 |
| 7. | கூடைப்பந்து (ஆண்கள்), வி.ஐ.டி. பல்கலைக்கழகம், காட்பாடி. | 27.02.2023 |
| 8. | நீச்சல் (ஆண்கள்), வி.ஐ.டி. பல்கலைக்கழகம், காட்பாடி. | 27.02.2023 |
| 9. | கால்பந்து (பெண்கள்), மாவட்ட விளையாட்டு அரங்கம், காட்பாடி | 24.02.2023 |
| 10. | கூடைப்பந்து (பெண்கள்), வி.ஐ.டி. பல்கலைக்கழகம், காட்பாடி. | 28.02.2023 |
| 11. | நீச்சல் (பெண்கள்), வி.ஐ.டி. பல்கலைக்கழகம், காட்பாடி. | 28.02.2023 |
| 12. | இறகுப்பந்து (ஆண்கள்) (Onyx இறகுப்பந்து அகாடமி), மசூதி அருகில், வெள்ளக்கல் மேடு.காட்பாடி. | 27.02.2023 மற்றும் 28.02.2023 |
| 13. | இறகுப்பந்து (பெண்கள்) (Onyx இறகுப்பந்து அகாடமி), மசூதி அருகில், வெள்ளக்கல் மேடு.காட்பாடி. | 01.03.2023 |
| 14. | கையுந்துப்பந்து (ஆண்கள்), வி.ஐ.டி. பல்கலைக்கழகம், காட்பாடி. | 27.02.2023 |

| | | |
|---|---|---|
| 15. | கையுந்துப்பந்து (பெண்கள்), வி.ஐ.டி.<br>பல்கலைக்கழகம், காட்பாடி. | 28.02.2023 |
| 16. | கபடி (ஆண்கள்)<br>மாவட்ட விளையாட்டு அரங்கம், காட்பாடி | 25.02.2023 மற்றும்<br>26.02.2023 |
| 17. | கபடி (பெண்கள்)<br>மாவட்ட விளையாட்டு அரங்கம், காட்பாடி | 27.02.2023 |
| 18. | ஹாக்கி (ஆண்கள்)<br>மாவட்ட விளையாட்டு அரங்கம், காட்பாடி | 25.02.2023 |
| 19. | ஹாக்கி (பெண்கள்)<br>மாவட்ட விளையாட்டு அரங்கம், காட்பாடி | 27.02.2023 |

மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்
நலன் அலுவலர், வேலூர்,